முழுவதும் குளிரூட்டப்பட்ட இரண்டு படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் புதிய படப்பிடிப்புத் தளங்கள் அமைவதன்மூலம், திரைப்படத் துறையினர் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், திரைப்படப் பயிற்சி பெறும் மாணவ மாணவியருக்கும் இது பெரும் வாய்ப்பாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அரசு மைய அச்சகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் நவீனமயமாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீனமயமாக்கத்தின்மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில், அழைத்துச் செல்வதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள் உள்பட, அரசுக்குத் தேவையான அனைத்து அச்சகத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை அரசு மைய அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

182 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு மைய அச்சகத்தின் பணிப் பளு அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டும், பெரும்பாலான பணிகள் குறுகிய காலத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதைக் கருத்தில்கொண்டும், அச்சகத்தின் இயந்திரப் பிரிவினை நவீனமயமாக்கும்வகையில் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனித் தாள் பல வண்ண அச்சு இயந்திரம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினியிலிருந்து அச்சுத் தகடு தயாரிக்கும் இயந்திரம், 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி சேகரிப்பு இயந்திரம், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரை அச்சு இயந்திரம் என மொத்தம் 8 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. இதேபோன்று, 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய காகிதக் கிடங்கு கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சென்னை, அரசு மைய அச்சகத்தில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தில் கட்டடங்களும், அச்சு இயந்திரங்களும் சேதமடைந்ததால், சீரமைப்பு நடவடிக்கையாக இயந்திரக் கொள்முதல் மற்றும் தொடர்புடைய பிற பணிகளுக்காக 19 கோடியே 7 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், கட்டடப் பணிகளுக்காக 3 கோடியே 57 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 22 கோடியே 64 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த அச்சகத்தின் 84,000 சதுர அடிகள் கொண்ட பழமை வாய்ந்த சிவப்புக் கட்டடமானது, இந்தத் தீ விபத்தில் முழுவதுமாக எரிந்து சேதமடைந்துவிட்டதாலும், பணியாளர்கள் சிரமமின்றி பாதுகாப்புடன் பணிபுரிய நிரந்தரமான கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டும், 21 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, அரசு மைய அச்சகத்தில் மேற்கொள்ளப்படும், அனைத்து அச்சுப் பணிகளும் ஒரே நேரத்தில், குறைந்த காலத்தில், விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால், அங்குள்ள அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவு அதாவது Binding Section மேம்படுத்தப்படுவது அவசியம் ஆகும். எனவே, அரசு மைய அச்சகத்தின் அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவிற்காக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம், அதாவது, Automatic Sewing Machine for Binding வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கூடுதல் உற்பத்தித் திறனுடன் அதிக நேர்த்தியாகவும், விரைவாகவும் புத்தகங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)